# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் 2019 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் தேதி வெள்ளிகிழமை மாலை 4.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை:-** **திரு.** A.W.சையத் முஸ்தபா கமால், B.Sc.,
**தனி அலுவலர் / ஆணையாளர்**

## கூட்ட பொருள்கள்

**பொருள் எண்-1**

கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையர் அவர்களின் ஜீலை 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பதிவு செய்யலாம்.

**பொருள் எண்-2**

சென்னை-28, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 31159/2018/டிபி3 நாள் 05.03.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரையின்படி, அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் தமிழ்நாடுஅரசிதழ் எண் 43, பகுதி III பிரிவு 1(a) நாள் 04.02.2019ன்படி, கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குப்பட்ட பகுதிகளில் புதியதாக கட்டப்படும் கட்டிடங்கள், கூடுதல் கட்டிடங்கள் மற்றும் புதிய மனைப்பிரிவுகள் அமைக்கும் போது நகரமைப்பு பிரிவு சட்ட விதிகளுக்கு உட்பட்டு கட்டிட அனுமதி மற்றும் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்க கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் மீது உரிய கட்டிட அனுமதிக் கட்டணம், கட்டிட அபிவிருத்தி கட்டணம் மனைப்பிரிவுக்கான கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் தற்போதுள்ள நடைமுறையிலிருந்து கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் விதி 14ல் கட்டட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை காலநீடிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால், கட்டிட அனுமதி கட்டணத்தை 5 ஆண்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கேற்பவும், கால நீடிப்பு காலத்தை 3 ஆண்டுகளுக்கு வழங்குவதற்கேற்பவும் மாற்றியமைக்கவும், திருத்திய கட்டண விகிதங்கள் **01.9.2019** முதல் அமுல்படுத்த இந்நகர் மன்றம் தீர்மான எண். **43** நாள். **28.06.2019**ல் ஒப்புதல் அளித்துள்ளது. புதிய கட்டண விகிதத்தை அமுல்படுத்த பொதுமக்களிடம் இருந்து ஆட்சேபணை மற்றும் ஆலோசனைகள் **15** தினங்களில் வழங்க மாலை முரசு நாளிதழில் **19.7.2019–**ல் விளம்பரப்படுத்தப்பட்டது. பொது மக்களிடமிருந்து எவ்விதமான ஆட்சேபணையோ ஆலோசனைகளோ வரப்பெறவில்லை. எனவே திருத்திய கட்டண விகிதத்தை ஊர்ஜிதம் செய்யவும் அரசிதழில் வெளியிட்டு **01.09.2019** முதல் அமுல்படுத்தவும் மன்றப் பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**திருத்தியமைக்கப்பட்ட கட்டிட உரிமக் கட்டண விபரம்.**

| வ. எண் | நகராட்சி சட்டப் பிரிவு | விவரம் | அளவு | ஏற்கனவே வசூலித்த கட்டணம் | தற்போது வசூலிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டணம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | 175 | **மனை உட்பிரிவு அனுமதி கட்டணம்** | | | | |
| | | அ) 2 மனைகள் வரை | | இல்லை | 1000/- | ஒரு முறை மட்டும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 176 (அ) | காலியிடத்தை தெருக்கள் அங்கீகாரம் செய்ய மேற்பார்வை கட்டணம் (Layout | ஒரு ஏக்கர் அதன் பாகம் | இல்லை | 5000/- | ஒரு முறை மட்டும் |
| 3 | -- | நகரமைப்பு ஆய்வரின் புதிய மனைப்பரிவு ஆய்வுக் கட்டணம் | மனைப்பிரிவு ஒன்றுக் | இல்லை | 5000/- | ஒரு முறை மட்டும் |
| 4 | 183<br>186 | அ) கட்டிடங்களுக்கு முன்னால் உள்ள தெருக்களில் தற்காலிகமாக பந்தல், நிழல், தட்டி முதலியவைகள் போட்டுக் கொள்ள, | 1 ச.மீ.அதன் பாகத்திற்கு | இல்லை<br>இல்லை | 30/-<br>30/- | ஏழு தினங்கள் மட்டும்<br>ஒரு முறை மட்டும் |
| | | இ) துக்க காரியங்களுக்கு பந்தல் போட | 1 ச.மீ.அதன் பாகத்திற் | இல்லை | இலவசம் | மூன்று தினங்கள் மட்டும் |
| | | இ) கல்யாணம் மற்றும் விஷேச காலங்களில் பந்தல் போட | 1 ச.மீ.அதன் பாகத்திற் | இல்லை | இலவசம் | மூன்று தினங்கள் மட்டும் |
| 5 | 186 | **தெருக்களில் போக்குவரத்து இடைஞ்சல் இன்றி கட்டிட சாமான்கள் சேகரித்து வைக்க**<br>அ) .சாதாரண குடியிருப்பு | உத்தேச கட்டுமான பரப்பில் 1 ச.மீ. | அனுமதி கட்டணத்தில் 25% கூடுதலாக கட்ட வேண்டும் | கட்டுமான பரப்பிற்கு 1 ச.மீ. ரூ.10/– வீதம் | ஒருமுறை மட்டும் |
| | | ஆ) அடுக்குமாடி மூன்று குடியிருப்புக்கு மேல் | உத்தேச கட்டுமான பரப்பில் 1 ச.மீ. | -Do- | கட்டுமான பரப்பிற்கு 1 ச.மீ. ரூ.10/– வீதம் | ஒருமுறை மட்டும் |
| | | இ). பல அடுக்குமாடி குடியிருப்பு மற்றும் வணிகம் , தொழிற்சாலை அலுவலக கட்டிடங்கள் | உத்தேச கட்டுமான பரப்பில் 1 ச.மீ. | -Do- | கட்டுமான பரப்பிற்கு 1 ச.மீ. ரூ.10/– வீதம் | ஒருமுறை மட்டும் |
| 6 | 197<br>199 | **<u>குடியிருப்பு கட்டடம்</u> (சாதாரணம் கட்டடம் /அடுக்குமாடி கட்டடம்)**<br>அ) RCC மற்றும் தட்டோடு தரைதளம் மற்றும் தரை கீழ்தளம் அமைக்க Basement floor, under ground floor | ஒவ்வொரு 1 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 1 ச.மீ.15/– வீதம் | 30/- | ஐந்து ஆண்டுகளுக்கு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | and ground floor. | | | | |
| | | ஆ) முதல்மாடி கட்டிடம் கட்ட First Floor | ஒவ்வொரு **1** ச.மீட்டருக்கு | 18/- | 40/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| | | இ) 2ம் தளம் கட்ட மற்றும் அதற்கு மேல் Second Floor and above | ஒவ்வொரு **1** ச.மீட்டரு | 18/- | 50/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| 7 | | சுவர் (அ) வேலி முதலியவை அமைத்தல் 2.40 மீ உயரம் மேற்படாமல் | நீளத்திற்கு **1** ச.மீ. | ரூ.**200/–** | 20/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| 8 | | கிணறு (அ) ஆழ்துளை கிணறு வெட்ட அனுமதி | **1** க்கு | ரூ.**200/–** | 500/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| 9 | | **<u>இடம் ஆய்வு கட்டணம்</u>** அ) குடியிருப்பு (Inspection Charges) | ஒருமுறை மட்டும் | இல்லை | 500/- | ஒரு முறை மட்டும் |
| | | ஆ) வணிகம் (Inspection Charges) | ஒருமுறை மட்டும் | இல்லை | 1000/- | ஒரு முறை மட்டும் |
| 10 | | குடியிருப்பு வீடு கட்ட, மனை அங்கீகரிக்க (Site approval) | **1–**க்கு | ரூ. **300/–** | 1000/- | ஒரு மனைக்கு ஒருமுறை மட்டும் |
| 11 | | குடியிருப்பு அல்லாத கட்டுமானங்கள் கட்ட மனை அங்கீகரிக்க(கடை, குடோன், அலுவலகம், கட்டுமானங்கள் கட்ட) (Site approval) | **1–**க்கு | ரூ. **600/–** | 2000/- | ஒரு மனைக்கு ஒரு முறை மட்டும் |
| 12 | | இதர கட்டிட மனைகள் அங்கீகரிக்க (கல்வி தொழிற்சாலை , மருத்துவமனை, குடிசைத் தொழில் லேபர், ஓட்டல், கல்யாண மண்டபம் கட்ட) (Site approval) | **1–**க்கு | இல்லை | 3000/- | ஒரு மனைக்கு ஒரு முறை மட்டும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 13 | | **<u>குடியிருப்பு அல்லாத கட்டிடம்</u>**<br>அ) RCC, தட்டோடு, தரைதளம், தரைகீழ் தளம், முதல்தளம் வரை | **1** ச.மீ | 30/-<br>**1** ச.மீ | 60/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| | | ஆ) அதற்கு மேல் தளம் | **1** ச.மீ | 36/- | 100/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| 14 | | A. குளியல் அறை<br>B.கழிவறை<br>C. செப்டிக் டேங்க்<br>D.மாடி படிக்கட்டு<br>E.குளியல் அறை மற்றும் கழிவறை | ஒரு எண்ணிக்கை<br>“<br>“<br>“<br>“ | இல்லை<br>இல்லை<br>200/-<br>இல்லை<br>இல்லை | 200/-<br>200/-<br>500/-<br>200/-<br>400/- | ஐந்து ஆண்டுகள் அனுமதி |
| 15 | | அ) மனைப்பிரிவு வரைபட நகல்<br>ஆ) கட்டிட வரைபட நகல்<br>இ) மன்ற தீர்மான நகல் | ஒன்றுக்கு<br>“<br>“ | இல்லை<br>100/-<br>இல்லை | 300/-<br>200/-<br>100/- | ஒரு முறை மட்டும்<br>“<br>“ |
| | | **<u>அபிவிருத்தி கட்டணங்கள்</u>**<br>**1**). குடியிருப்பு கட்டிடம்<br>**2**). குடியிருப்பில்லாத கட்டிடம் | **1** ச.மீ<br>**1** ச.மீ | 4.00<br>8.00 | 10.00<br>20.00 | ஐந்து ஆண்டுகளுக்கு |
| 16 | | **<u>இதர கட்டணம்</u>**<br>மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி (OHT) தனியாக அமைக்கும் பட்சத்தில் | ஒன்றுக்கு | இல்லை | 500/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| 17 | | **நகராட்சி வரைபட வரைவாளராக <u>உரிமம் வழங்க</u>** | | | | |
| | | a)பதிவுக் கட்டணம் | ஒருமுறை | இல்லை | 5000/- | நிதி ஆண்டு |
| | | b)வைப்புத் தொகை | ஒருமுறை | இல்லை | 3000/- | ஒரு தடவை மட்டும் |
| | | c)உரிமம் புதுப்பித்தல் | வருடத்திற்கு | 1000/- | 5000/- | ஐந்து ஆண்டுகளுக்கு |
| 18 | | சங்கிலி போட்டு இடத்தை அளந்து | ஒரு சர்வே | இல்லை | 500/- | ஒரு முறை மட்டும் |
| 19 | | கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மாறுதல் இன்றி கட்டிடம் ஒயிட் வாஷ், பெயிண்ட் அடித்து பராமரிப்பு செய்கிட | பட்டா இடத்திற்கு மட்டும் | இல்லை | இலவசம் | ஒரு முறை மட்டும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 20 | 204 | கட்டிட அனுமதி ஆணை வழங்கப்பட்ட கால அளவுக்குள் **(ஐந்து ஆண்டுகளுக்குள்)** கட்டடம் கட்டி முடிக்கப்படாத நிலையில் மீண்டும் அமைப்பு படங்களுடன் புதியதாக மனு செய்து உரிய கட்டணங்கள் செலுத்தி புதியதாக கட்டட அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். | பெறப்பட்ட கட்டட அனுமதி காலம் முடிவுற்ற நிலையில் | கட்டிட அனுமதி பெறும் பொழுது செலுத்தப்பட்ட கட்டிட உரிமம் கட்டணம் மற்றும் அபிவிருத்தி கட்டணம் முழுவதும் செலுத்தி வரைபடங்கள் | கட்டிட அனுமதி பெறும் பொழுது செலுத்தப்பட்ட கட்டிட உரிமம் கட்டணம் மற்றும் அபிவிருத்தி கட்டணம் முழுவதும் செலுத்தி வரைபடங்கள் சமர்ப்பிக்க வேண்டும் | பெறப்பட்ட கட்டிட அனுமதி காலம் ஐந்தாண்டு முடிவுற்ற நிலையில் ஒரு மாதத்திற்கு முன்னர் மனுதாரர் விண்ணப்பித்தால் ஏற்கனவே செலுத்திய மொத்த கட்டணத்தில் 75% கட்டணம் செலுத்தினால் போதுமானது. தவறினால் 100% கட்டணம் |
| 21 | | நகராட்சியால் வழங்கப்படும் சான்று (ஒன்றுக்கு) | சான்று ஒன்றுக்கு | 50/- | 300/- | ஒரு முறை மட்டும் |
| 22 | | நகர வரைப்படம் நகல் வழங்க (TOWN MAP) | நகல் ஒன்றுக்கு | இல்லை | 500/- | – |
| 23 | | மழைநீர் சேகரிப்பு தொட்டி (Rail Water Harvest) | ஒரு முறை கட்டணம் | 3000/- | 4000/- | கட்டிடம் கட்டி மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்து போட்டோவுடன் மனுதாரர் சமர்பித்தால் செலுத்திய தொகை திருப்பி வழங்கப்படும் |
| 24 | | சர்வே புலப்பட நகல் மற்றும் ‘அ‘ பதிவேடு நகல் வழங்க (TSLR & FMB) | ஒரு புல எண்ணிற்கு | இல்லை | 400/- | ஒரு முறை மட்டும் |
| 25 | | கட்டிட அனுமதி பெறும் முன்பு கட்டிட வேலை துவங்கி விட்டால் மேற்கண்ட கட்டிட அனுமதி கட்டணத்தில் 25% கூடுதல் கட்டணமாக செலுத்த வேண்டும் | – | – | கட்டிட அனுமதி பெறும் முன்பு அங்கீகாரம் அளிக்கப்படும் வரைபடத்தின்படி கட்டிட வேலை துவங்கி விட்டால் மேற்கண்ட கட்டிட அனுமதி | – |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கட்டணத்தில் 50% கூடுதல் கட்டணமாக செலுத்த வேண்டும் | |
| 26 | | கட்டிட இடிமானம் அப்புறப்படுத்த | ஒரு முறை | இல்லை | 1000/- | ஒரு முறை மட்டும் |
| 27 | | கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் மாறுதல் இன்றி கட்டிடம் பராமத்து செய்துகொள்ள | பட்டா இடத்திற்கு மட்டும் | இல்லை | 500/- | ஒரு முறை மட்டும் |

***<u>அலுவலக குறிப்பு</u>***

1. திருத்தி அமைக்கப்பட்ட உரிமக் கட்டண விபரத்தை **01.09.2019** முதல் அமுல்படுத்தவும் அதனை மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2. உரிய செலவுத் தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் 2019 ஆகஸ்ட் மாதம் 30 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை:-** **திரு.** A.W.சையத் முஸ்தபா கமால், B.Sc.,
**தனி அலுவலர் / ஆணையாளர்**

**கூட்ட பொருள்கள்**

**பொருள் எண்-1**

அரசு ஆணை எண்.62 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 17.01.1994 மற்றும் நகராட்சிகள் சட்டம் 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் விதிமுறை 62(எ)ல் வெளியிடப்பட்டுள்ள திருத்தங்களின் படியும்1992–93 முதல் தணிக்கை பணியாளர்களின் ஊதியம் மற்றும் இதர படிகள் உண்மை செலவில் 50ரூ தணிக்கை கட்டணமாக நகராட்சி நிதியிலிருந்து அரசு நிதிக்கு செலுத்தப்பட வேண்டும்.

மேற்படி 2017–2018ம் ஆண்டுக்கான தணிக்கை கட்டணம் ரூ.117471/– என கணக்கிடப்பட்டுள்ளவாறு (2017–2018 தணிக்கை பத்தி எண்.70) மேலும் உதவி இயக்குநர், உள்ளாட்சி தணிக்கை துறை, விழுப்புரம் அவர்களின் ந.க.எண்.1138/ஆ2/2018, நாள் 20.03.2019 கடிதத்தில் 2016–2017ம்ஆண்டு தணிக்கை கட்டணம் நிலுவை தொகை ரூ.3630/– செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. 2016–2017 மற்றும் 2017–2018க்கு தொகை ரூ.121101/–ஐ உரிய அரசு தலைப்பில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஆணையம் (ம) தனி அலுவலர் முன்னனுமதி பெற்று அரசு தலைப்பில் தொகை செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 2027 /2019/பி1)**

**பொருள் எண்-2**

இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.பி.குணா, என்பவர் தனக்கு மாப்க புற்றுநோய் வந்து மிகவும் அவதிப்படுவதாகவும் தனது சொந்த ஊரான விழுப்புரம் நகராட்சியில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணி இடத்திற்க பணிமாறுதல் வேண்டி விண்ணப்பத்துள்ளார். அன்னாரின் கோரிக்கையை ஏற்று விழுப்புரம் நகராட்சிக்கு பணிமாறுதல் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3642 /2019/அ1)**

## <u>பொருள் எண்-3</u>

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண் TN 32 AV 2277 நீண்டகால பயன்பாட்டின் காரணமாக கீழ்க்காணும் பழுதுகள் ஏற்பட்டுள்ளதாக ஈப்பு ஓட்டுநரால் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி வாகனத்தினை பழுது நீக்கம் செய்ய பழுது நீக்கம் செய்யும் பணிமனைகளிடமிருந்து **13.08.2019**ம் தேதியன்று வரப்பெற்ற விலைப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பழுதின் விபரம் | எண்ணிக்கை | **கெவின் டயர்ஸ், கள்ளக்குறிச்சி** | சென்டல் டயர்ஸ், சேலம் | வீல்ஸ், சேலம் |
|---|---|---|---|---|---|
| 1. | 215/75 R15 Micholin tyre | 4 | **28800** | 29600 | 29200 |
| 2. | டியூப்லஸ் வால்வு | 4 | **400** | 400 | 400 |
| 3 | பொலிரோ பேலன்ஸ் | 4 | **640** | 640 | 640 |
| 4. | பொலிரோ அலைய்ன்மென்ட் | 1 | **450** | 450 | 450 |
| | மொத்தம் | | **30290** | 31090 | 30690 |

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **"கெவின் டயர்ஸ், சென்னை மெயின்ரோடு, நீலமங்கலம் x சாலை, பைபாஸ், கள்ளக்குறிச்சி"** என்ற நிறுவனத்திற்கு தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 3627 / இ1 / 2019)**

## <u>பொருள் எண்-4</u>

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பயன்பாட்டில் ஜெனசெட் நீண்டகால பயன்பாட்டின் காரணமாக கீழ்க்காணும் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் அதனை பழுது நீக்கம் செய்து பயன்பாட்டில் கொண்டுவர ஏதுவாக, பழுது நீக்கம் செய்யும் பணிமனைகளிடமிருந்து **20.08.2019**ம் தேதியன்று வரபெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் விபரம்** | **எண்ணிக்கை** | **கண்ணகி மோட்டார்ஸ், கள்ளக்குறிச்சி** | **ஶ்ரீதாய் லேபர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், கள்ளக்குறிச்சி** | **ஶ்ரீவெங்கடேஸ்வரா லேபர் ஆட்டோ ஒர்க்ஸ், கள்ளக்குறிச்சி** |
|---|---|---|---|---|---|
| 1 | Engine oil 13 let. can | 1 | 3120 | 3300 | 3400 |
| 2 | Oil filter | 1 | 355 | 360 | 370 |
| 3 | Diesel filter | 1 | 120 | 130 | 150 |
| 4 | Coolant oil 26 lit can | 1 | 3000 | 3200 | 3100 |
| 5 | Fuel pipe | 1 | 990 | 1000 | 1100 |
| 6 | Fuel filter | 1 | 400 | 420 | 450 |
| 7 | For KFA01 | 1 | 1200 | 1300 | 1400 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | Water pump assembly | 1 | 3500 | 3600 | 3700 |
| 9 | Water pump fitting chg | 1 | 650 | 700 | 750 |
| 10 | Radiator hose kit set | 1 | 1400 | 1450 | 1500 |
| 11 | Rubber hose fitting | 1 | 500 | 560 | 600 |
| 12 | AIR filter | 1 | 800 | 850 | 900 |
| 13 | Engine oil service | 1 | 1500 | 1600 | 1700 |
| 14 | Bracket welding | 1 | 1500 | 1550 | 1650 |
| 15 | Radiator BEO | 2 | 900 | 950 | 950 |
| 16 | Crank chase clean | | 600 | 650 | 660 |
| 17 | Self starter switch service | | 1000 | 1100 | 1150 |
| 18 | Moving coil fittings | | 3000 | 3200 | 3250 |
| 19 | Fan belt | | 900 | 950 | 1000 |
| 20 | Valve alignment engine Tune-up charge | | 900 | 950 | 1000 |
| | மொத்தம் | | 26335 | 27820 | 28780 |

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **"கண்ணகி மோட்டார் ஓர்க்ஸ், சேலம் மெயின்ரோடு, அண்ணாநகர், கள்ளக்குறிச்சி"** என்ற நிறுவனத்திற்கு தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்2890/இ1/ 2019)**

**பொருள் எண்-5**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 21 வரை உள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 2019-2020 துப்புரவு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடித மூ.மு.எண்.25032/2018/பி3 நாள்.24.10.2018 ன்படி 124 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திட அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சியில் 124 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 05.06.2019, 12.06.2019, மற்றும் 02.07.2019 ஆகிய தேதிகளில் சென்னை செய்தி மக்கள் தொடர்பு துறை இயக்குநர் அவர்களின் மூலம் செய்திதாள்களில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்க்கண்ட விபரப்படி தொகை வழங்க கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே, கீழ்காணும் விபரப்படி தொகை வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகைரூ |
|---|---|---|
| 1 | கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர் பட்டியல் எண்.3457 நாள்.05.06.2019 | ரூ.88234.00 |
| 2 | கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர் பட்டியல் எண்.3466 நாள்.12.06.2019 | ரூ.35294.00 |
| 3 | கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர் பட்டியல் எண்.3504 நாள்.03.07.2019 | ரூ.118607.00 |
| | மொத்தம் ரூ. | 242135.00 |

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி செய்திதாள்களில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை வெளியீடு செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

3.பட்டியல் படி தொகை கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2456 /2018 /எச்1)**

## பொருள் எண்-6

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள ஜென்செட் நீண்டகால பயன்பாட்டில் உள்ளதால் அதில் உள்ள பேட்டரி பழுது ஏற்படுவதால் அதனை புதியதாக மாற்றி ஜெனரேட்டரை பயன்பாட்டிற்கு கொண்டுவர 18.07.2019ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனங்களின் விபரம்

| வ. எண் | பழுதின் விபரம் | எண்ணிக்கை | ஸ்ரீ அம்மன் ஆட்டோ எலக்ட்ரிகல் ஒர்க்ஸ், கள்ளக்குறிச்சி | ஸ்ரீபிரியா பேட்டரி சர்வீஸ் சென்டர், கள்ளக்குறிச்சி | SFC SONIC Batteries, சின்னசேலம் |
|---|---|---|---|---|---|
| 1 | Supply and fixing of Kirloskar Genset 150 AH Battery | 1 | 14250 | 15000 | 13950 |
| | மொத்தம் | | 14250 | 15000 | 13950 |

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனமான “ **M/s SFC SONIC Batteries,சின்னசேலம்“–யின்** விலைப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
4. செலவினத்தை பொது நிதியில் வழங்கலாம்.

**(ந.க.எண்.3498 /இ1/ 2019)**

## பொருள் எண்-7

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல் முறை உத்தரவு ந.க.எண்.13449/ஜே2/2019 நாள்.25.06.2019 ல் காஞ்சிபுரம் அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோவில் நடைபெற்ற அத்திவரதர் வைபவம் 01.07.2019 முதல் 17.08.2019 வரை 48 தினங்கள் நடைபெற்ற திருவிழாவிற்கு 5 குழுக்களாக சுகாதார பணிகள் மேற்கொள்ள அனைத்து நகராட்சிகளிலிருந்தும் துப்புரவுபணியாளர், துப்புரவு பணி மேற்பார்வையாளர் மற்றும் ஓட்டுனர் லாரியுடன் அனுப்ப தெரிவிக்கப்பட்டது.அதன்படி குழுவிற்கு சராசரி 10 நாட்கள் பணி மேற்கொள்ள இந்நகராட்சியில் 1வது குழுவில் 20 துப்புரவு பணியாளர்கள், 2வது குழுவில் 2 ஓட்டுனர்கள் (லாரியுடன்), 1 துப்புரவு பணி மேற்பார்வையாளர், மற்றும் 4வது குழுவில் 1 ஓட்டுனர் (லாரியுடன்) ஆக மொத்தம் 24 பணியாளர்களை இந்நகராட்சியிலிருந்து அனுப்பி மேற்கண்ட சுகாதார பணிகள் மேற்கொண்டமைக்கு பணியாளர்கள் சென்று வந்ததற்கு பயணபட்டியல்

தயாரிக்கப்பட்டுள்ளது.அதன்படி பயணபட்டியல் தொகை ரூ.17400/- வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3028 / 2019 /எச்1)**

**<u>பொருள் எண்-8</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சியல் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண் TN 15 AY 6671 என்ற வாகனத்தின் பாலிசி எண் **2805023118**P106036027 என்ற எண்ணிட்ட **07.08.19**ல் பாலிசி முடிவடைவதால் பாலிசி கட்டணம் ரூ.**15650/–** யை செலுத்த கோரி கடிதம் வரப்பெற்றது. அதன்படி மேற்படி தொகையை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகையினை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட், கள்ளக்குறிச்சி பெயருக்கு பட்டியல் தொகையை செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்3448/இ1/2019)**

**<u>பொருள் எண்-9</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் **01** முதல் **21** வரையுள்ள வணிக நிறுவனங்கள் இந்நகராட்சியில் தொழில் உரிமம் பெறாமல் தொழில் நடத்தி வருகிறார்கள், மேலும் இது குறித்து இந்நகராட்சியின் தணிக்கையில் தொடர்ச்சியாக பத்தி எழுப்பபட்டு வருவதாலும் இதனால் நகராட்சி பெரும் இழப்பீடு ஏற்படுவதாலும், நகரில் உள்ள அனைத்து விதமான வணிக நிறுவன உரிமையாளர்களிடம் தொழில் உரிமம் கட்டணம் வசூலிக்கும் பொருட்டு, இந்நகராட்சிக்கு தொழில் உரிமம் கட்டணம் கோரும் விண்ணப்பம் இல்லாததால் சுமார் **5000** விண்ணப்பங்கள் அச்சடிக்க திருச்சி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ் என்ற நிறுவனத்திடமிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே, பட்டியல்படி தொகை ரூ.**11564**/- மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்

**2.**பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவரின் முன்னனுமதி பெற்று தமிழ்நாடு மல்டிப்பர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**3.**பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3352 / 2019 /எச்1)**

**<u>பொருள் எண்-10</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் **26.08.2019** ம் தேதி நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் நடத்தப்பட்ட ஆய்வு கூட்ட அறிவுரையில் தற்போது பருவமழை தொடங்கி உள்ளதால் உள்ளாட்சி பகுதியில் கொசுவினால் பரவும் நோய்களான டெங்கு, சிக்கன்குனியா மற்றும் பன்றிகாய்ச்சல் அதிகமாக பரவி வரும் தொற்று

நோய்களை தடுக்கும் பொருட்டு ஒவ்வொரு உள்ளாட்சி பகுதியிலும் மொத்த வீடுகளை கணக்கீடு செய்து 300 வீடுகளுக்கு தலா 1 நபர் வீதம் (DBC) கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை பணியமர்த்திக்கொள்ள அறிவுறுத்தப்பட்டதற்கிணஙக, இந்நகராட்சி பகுதியில் மொத்தம் 14285 வீடுகளுக்கு (14285 / 300 = 47 ) 47 நபர்களை கொண்டு இப்பணி மேற்கொள்ள கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், விழுப்புரம் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.பிடி2/6191/2015 நாள் :-15.04.2019 ல் உத்தரவிடப்பட்டதற்கிணஙக இந்நகராட்சிக்கு கொள்ளை நோய் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பணிக்கு 10 நபர்கள் (கொசுபுழு ஒழிப்பு பணியாளர்கள்) 60 நாட்களுக்கு தற்காலிகமாக பணிபுரிய இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.61 நாள் :- 31.07.2019 அனுமதி அளிக்கப்பபட்டு, 10 நபர்கள் தற்போது பணிபுரிந்து வருகிறார்கள். எனவே, பணியின் அவசர அவசியம் கருதியும் பொதுமக்களின் நலன் கருதியும் கூடுதலாக 37 நபர்கள் ஆக மொத்தம் 47 நபர்கள் (DBC) கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை ஏற்கனவே பணிபுரிந்து வரும் ராசி மகளிர் சுயஉதவிகுழு மூலம் பணிபுரிய எதிர்வரும் 01.09.2019 முதல் 90 நாட்களுக்கு பணியில் அமர்த்திகொள்ளவும், இவர்களுக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகை நாளொன்றுக்கு ரூ.275/- வீதம் ஊதியம் வழங்கிடவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.12.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி எதிர்வரும் 01.09.2019 முதல் 90 நாட்களுக்கு பணிபுரிய மன்றம் அனுமதிக்கலாம்

3.நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1490 /2019/எச்1)**

## பொருள் எண்-11

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகராட்சி முதல்நிலை சேகரிப்பு பணிக்கு 5 LCV மற்றும் 27 BOV வழங்கப்பட்டுள்ளது. 27 BOV க்களை துப்புரவு பணியாளர்கள் மற்றும் தனியார் ஆட்கொடுப்பு பணியாளர்களைக்கொண்டு இயக்கப்படுகிறது. LCV வாகனத்தை இயக்க ஏதுவாக ஓட்டுநர் இல்லாத காரணத்தினாலும், மேலும் நகராட்சி BEML (JCB) வாகனத்தை இயக்கும் ஓட்டுநர் பணியிடம் இல்லாத காரணத்தினாலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உத்தரவு எண்.1191/பி3/2019 நாள்:21.01.2019ல் தெரிவித்துள்ளவாறு 5 ஓட்டுநர்களை LCV வாகனத்திற்கும், 1 ஓட்டுனர் BEML (JCB) வாகனத்திற்கும் தனியார் ஆட்கொடுப்பு ( Out Sourcing) மூலம் 6 ஓட்டுனர்களை எடுத்து கொள்ளவும், இவர்களுக்குரிய ஊதியத்தினை மாவட்ட ஆட்சித்தலைவரின் 2019-2020 ம் ஆண்டின் விலைவிகித பட்டியல் படி வழங்கவும் ஒரு ஆண்டிற்கு ஆகும் செலவினத்தை பின்வருமாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது

| | | |
|---|---|---|
| 1 ஓட்டுநருக்கு ஒரு நாள் கூலி | - | ரூ.415/- |
| 1 ஓட்டுநருக்கு 1 ஆண்டுக்கு கூலி 365*415 | – | ரூ.151475/- |
| EPF 13% 151475*13 / 100 | - | ரூ.19691.75 |
| ESI 4.75 % 151475*4.75/100 | - | ரூ.7195.06 |
| சீருடை 1 நபருக்கு 1 ஆண்டுக்கு | - | ரூ.1500.00 |
| இன்சூரன்ஸ் 1 நபருக்கு 1 ஆண்டுக்கு ரூ.45/- வீதம் *12 | - | ரூ.540.00 |
| ஒப்பந்ததாரர் நிர்வாக செலவினம் 5% | - | ரூ.7573.75 |

| | | |
|---|---|---|
| 151475*5/100 | | |
| 1 நபருக்கு 1 ஆண்டுக்கு மொத்தம் ரூ. | - | ரூ.187975.56 |
| 6 நபருக்கு 1 ஆண்டுக்கு மொத்த செலவினம் ரூ.187975.56*6 | - | ரூ.1127853.36 |
| Rounded Amount | - | ரூ.1130000/- |

எனவே, மேற்கண்டவாறு தனியார் ஆட்கொடுப்பின் மூலம் (out sourcing) பணிகள் ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.1130000/- மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

3.ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம் தினசரி நாளிதழில் வெளியிடவும் பெறப்படும் பட்டியலினை நகராட்சி பொது நிதிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3581 / 2019 /எச்1)**

## பொருள் எண்-12

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார வாகனம் எண்.TN32AV0552ன் தகுதி சான்று 29.08.2019ம் தேதியன்று முடிவுற்றதாலும், வாகனத்திலுள்ள பழுதுகளை நீக்கம் செய்ய வேண்டியுள்ளதாலும், மேற்படி வாகனம் அசோக் லேலேண்ட் கம்பெனியை வகையை சார்ந்ததால் விழுப்புரம் TVS நிறுவனத்திடம் கொண்டு சென்று மேற்படி வாகனத்துலுள்ள பழுதுகளை நீக்கம் செய்து கொள்ளவும், பழுதுகளை நீக்கம் செய்து பெறப்படும் பட்டியல் தொகையினை வழங்கவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி TVS விழுப்புரம் என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எச்1/3450/2019)**

## பொருள் எண்-13

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின், ஏமப்பேர் கிராமப்பிரிவிற்குட்பட்ட கீழ்க்காணும் பகுதிகளில் ஏற்கனவே உள்ள மின் கம்பங்களில் தெருமின் விளக்கு அமைப்பதற்கு ஏற்படி ஒயர்கள் மற்றும் மின் கம்பம் இல்லாத இடங்களில் புதியதாக மின் கம்பம் அமைத்து தெருமின் விளக்குகள் அமைப்பதற்கு, இவ்வலுவலகத்தின் மூலம் 22.11.2018ல் 42 விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | வார்டு எண்.01 | தீப்பெட்டி தொழிற்சாலை, மோரைப்பாதை சாலை, அம்மன் நகர், கிருஷ்ணா நகர் |
| 2 | வார்டு எண்.02 | எம்.ஜி.ஆர்.நகர், டி.எஸ்.பி அலுவலகம் உட்புறம் |
| 3 | வார்டு எண்.03 | கே.பி.ஆர் நகர் |
| 4 | வார்டு எண்.12 | சரஸ்வதி தெரு, பாலாஜி நகர், அருகில் உள்ள தெரு |
| 5 | வார்டு எண்.13 | ராமச்சந்திரா நகர் |

| | | |
|---|---|---|
| 6 | வார்டு எண்.15 | கே.ஏ.ஜி.நகர் விரிவாக்கம், இந்திரா நகர் விரிவாக்கம், கரியப்பா நகர் விரிவாக்கம், தச்சூர் மாரியம்மன் கோவில் பின்பு, ஏமப்பேர் நரிமேடு |
| 7 | வார்டு எண்.21 | டி.எம்.எஸ்.நகர் |

அதனடிப்படையில், மேற்காணும் வார்டு பகுதிகளில் புதியதாக தெரு மின் விளக்குகள் அமைப்பதற்கு, உதவி மின் பொறியாளர், கிராமம் / த.நா.மி.உ.(ம) ப.க. ஏமப்பேர் அவர்களின் க.எண். உமிபொ / கிராமம / ஏமப்பேர் / கோ.க.அ.எண்.324/2018–19 நாள் 25.03.2019ல், மதிப்பீடு தொகை ரூ.10,13,640/–ஐ செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, மேற்காணும் தொகையினை தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்திற்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3588 /2018/இ1)**

**பொருள் எண்-14**

தமிழ்நாடு உள்ளாட்சிகள் விளம்பரப்பதாகைகள் முறைப்படுத்தல், வரி விதித்தல் மற்றும் வரி வசூலித்தல் விதிகள், திருத்தங்கள் தொடர்பான அரசாணை எண். 15 மற்றும் 17 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 30.01.2019 மற்றும் அரசிதழ் எண்.39, நாள். 31.01.2019 ன் படி கீழ்க்கண்ட இடங்களில் விளம்பர பதாகைகள் வைக்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | தெருவின் பெயர் | | இடம் |
|---|---|---|---|
| 1 | கச்சேரி ரோடு | : | அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் |
| 2 | சேலம் மெயின் ரோடு | : | நேரு காய்கறி மார்க்கெட் |
| 3 | கச்சிராயப்பாளையம் ரோடு | : | மந்தைவெளி பொதுக்கூட்டமேடை |
| 4 | ஏமப்பேர் | : | மந்தைவெளி |

**அலுவலக குறிப்பு :**

அ.மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ.மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ள கட்டணங்கள் விவரப்படி 1.விண்ணப்பக்கட்டணம் ரூ.1000/– 2.அனுமதி கட்டணம் (அ)தமனி சாலைகள் மற்றும் முக்கிய சாலைகள் 1 ச.மீ–க்கு ரூ.6000/– (ஆ) இதர சாலைகள் 1 ச.மீ–க்க ரூ.4000/– 3.ஆண்டு வாடகை (அ) தமனி சாலைகள் மற்றும் முக்கிய சாலைகள் 1 ச.மீ–க்கு ரூ.500/– (ஆ) இதர சாலைகள் 1 ச.மீ–க்க ரூ.300/– வசூலிக்கலாம்.

இ. மேற்படி இடம் தேர்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் அவர்களின் அனுமதிக்க அனுப்பி வைக்கலாம்.

**ந.க.எண்.4329/2019/எப்1**

## <u>பொருள் எண்-15</u>

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **வருவாய் மற்றும் குடிநீர் நிதி 2019-2020** ஆம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 08.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின்பெயர்** | **மதிப்பீடு தொகை ரூ.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி விலை** |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 11 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் பழுது நீக்கம் செய்தல் | ரூ. 9,95,000/- | M/s. J.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.14 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திருமதி. S.பத்மா, கள்ளக்குறிச்சி | 0.55 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 12 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் பழுது நீக்கம் செய்தல் | ரூ. 9,95,000/- | திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | 0.26 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி | 4.29 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | நகராட்சிக்கு குடிநீர் விநியோக உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 9,90,000/- | M/s. ரீத்திகா டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி | 0.77 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. ஸ்ரீ விநாயகா எலக்ட்ரிக்கல்ஸ் ஸ்டோர்ஸ் & டூல்ஸ், கள்ளக்குறிச்சி | 2.34 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 4. | நகராட்சி குடிநீர் விநியோக பணிக்கு திரவ குளோரினேஷன் (Liquid Cholorination) கொள்முதல் செய்தல் | ரூ. 4,00,000/- | திரு. T.M.இளங்கோ, கள்ளக்குறிச்சி | 0.56 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. P.நடராஜன், கள்ளக்குறிச்சி | 11.11 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 5. | நகராட்சி அலுவலகத்தில் கழிவு நீர் சேகரமாகும் தொட்டி (Septic Tank) கட்டுதல் | ரூ. 2,25,000/- | திரு. P.நடராஜன், கள்ளக்குறிச்சி | 0.27 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. T.M.இளங்கோ, கள்ளக்குறிச்சி | 1.27 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 6. | நகராட்சி தெருமின் விளக்கு பராமரிப்பிற்கு உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 9,00,000/- | M/s. R.V. & Co., கள்ளக்குறிச்சி | 0.49 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. J.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 1.73 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

| வ. எ ண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 7. | ஏமப்பேர் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள திறந்தவெளி கிணற்றுக்கு அருகில் புதியதாக 2 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு அமைத்து மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய்கள் அமைத்தல் | ரூ. 7,00,000/- | திரு. J.முஸ்தபா, கள்ளக்குறிச்சி | 0.86 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. J.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 4.16 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிகளின் அவரச, அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**( ந.க.எண். 2737 / 2019 / இ1 )**

## பொருள் எண்-16

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொதுசுகாதாரம் மற்றும் தெருமின் விளக்கு வாகனங்களுக்கு GPS (MOOTRACK System, Chennai) மூலம் பொருத்தப்பட்ட GPS கருவிகள் பழுதடைந்ததை சரி செய்யவும் புதியதாக வாங்கப்பட்ட LCV வண்டிகளுக்கு GPS மேற்படி நிறுவனம் மூலம் பொருத்தவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.60,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலர் முன்னனுமதிப் பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 940 /2018/எச்1**